**செய்தி வெளியீடு** **நாள்** : 03.01.2025

**சென்னை தீவுத்திடலில் நடைபெறவுள்ள 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2025-ல் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்ட சாதனைகள் தொடர்பாக விளக்கக்கூடிய பல்வேறு புகைப்படங்கள் அரங்கத்தில் இடம் பெற உள்ளது**

**கண்காட்சி அரங்குகளை ஆய்வு செய்தபின் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி** இன்று (03.01.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெறவுள்ள 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி- 2025-ல் இடம் பெறவுள்ள இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சிஎம்டிஏ கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

ஆண்டுதோறும் நடைபெற்று வரக்கூடிய பொருட்காட்சியை பொறுத்தவரையில் பொங்கல் விழாவை வடசென்னை மக்கள் மகிழ்ச்சியாக கொண்டாடப்படுகிறது. குறிப்பாக 49 ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியனது நடைபெறவுள்ள நிலையில் தமிழகத்தில் உள்ள துறைகளை சார்ந்த 46 அரங்குகள் அமைக்கப்பட உள்ளது.

குறிப்பாக இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பாக அமைக்கப்படுகின்ற அரங்குகளை பார்வையிட வந்தோம். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் புதிதாக துவங்கப்பட்ட கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் உட்பட 6 பேருந்து நிலையங்களின் மாதிரியை (Miniatures) பொருட்காட்சியில் காட்சியமைக்கப்பட உள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 8,400 சதுர அடியில் உலக அளவில் பேசப்பட்ட அனைத்துலக முருகன் பக்தர் மாநாட்டை போல ஒரு வடிவமைப்பை இந்த பொருட்காட்சியில் இந்த ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் அரங்கை அமைத்துள்ளோம். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு தெய்வங்களின் வழிபாட்டு முறைகளையும் அந்த தெய்வங்களின் வரலாற்றையும் இடம்பெறச் செய்துள்ளோம்.

இந்த ஆட்சி பொறுப்பேற்று நிகழ்த்திய சாதனைகளில் 40 சாதனைகளை படங்கள் வாயிலாக விளக்க உள்ளோம். சுமார் 11 திருக்கோவில்களில் ஒரு கோடியே 50 லட்சம் ரூபாயில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டம் தொடர்பான விளக்க புகைப்படம் அமைக்கப்பட உள்ளது. அதை போல் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கின்ற திட்டத்தினை விளக்கக்கூடிய வகையில் புகைப்படங்களும் கண்காட்சியில் வைக்கப்பட உள்ளது.

அதேபோல் 400 வருடங்களுக்குப் பிறகு குடமுழக்கு திருவிழா நடைபெற்ற கன்னியாகுமரி மாவட்ட கோவில் தொடர்பான விளக்கப் புகைப்படமும் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றுலா பொருட்காட்சி நடைபெறக்கூடிய ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டில் உள்ள ஏதாவது ஒரு கோவிலின் பிரசாதம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய உள்ளோம்.

**கடந்தாண்டு இந்து சமய அறநிலையத்துறையின் அரங்கமானது இரண்டாம் பரிசு பெற்றது. இந்த ஆண்டு முதல் பரிசு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறோம்.** நாங்கள் வழிபடுகின்ற பொழுது அனைவரும் நன்றாக இருக்க வேண்டும் என்று தான் வழிபடுகிறோம். ஏனெனில் எங்களது வழிபாடு ஒரே குறிக்கோளை கொண்டு தான் இருக்கும்.

இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையர்கள் திரு.லஷ்மணன், திருமதி.ரேணுகாதேவி, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர் திரு.ந.பாலமுருகன், மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர் திரு.வெங்கடேசன் மற்றும் சுற்றுலாத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.